**சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2019**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையான மற்றும் நியாயமான விதத்தில் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் நிதியத்தைக் கணக்கொழிப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றீடு இல்லாவிடின் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குறித்த விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு அவ்வாளுகைக்குட்பட்ட தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலநேரத்திலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் தாக்கமளிப்பதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்து கொண்ட போதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் சரியான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயபூர்வத் தன்மையை மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளனவா என்பதும் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணப்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் ஆளுநர் சபையால் வழங்கப்பட்ட ஏதாவதொரு எழுத்துமூலச் சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிலையத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 57 ஆம் பந்தியின் பிரகாரம், ஒரு பொருளின் மொத்த கிரயத்துடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க கிரயத்தைக் கொண்டிருக்கும் சொத்தின் பாகங்கள் தனித்தனியாக தேய்மானம் செய்யப்பட வேண்டிய போதிலும், மொத்தக் கிரயம் ரூபா 126,255,800 ஆன நிலாவெளி பயிற்சி நிலையததின் கட்டிடத்துடன் 7 ஏக்கர் 37 பேர்ச்சஸ் காணி , காணி மற்றும் கட்டிடங்களாக தனித்தனியே இணங்காணப்பட்டு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலாவெளி பயிற்சி நிலையக்கட்டிடம் மற்றும் காணி தனித்தனியாக தற்போது மதிப்பிடப்படாமையால் அவை எதிர்காலத்தில் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வங்கி நிதித் துறையால் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய , 6 இலட்சம் புதிய குடும்பங்களுக்கு மானியம் வழங்குவதற்கான சமுர்த்தி அச்சிடுவதற்கு மற்றும் , விழாச் செலவுகளுக்காக நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 113,074,862 பெற வேண்டியவைகளாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்தச் செலவுகள் இதுவரை திருப்பிச் செலுத்தப்படாததால், அவற்றை பெற வேண்டியவைகளாக காட்டுவது அந்த ஆண்டின் மிகையை அதிகமாகக் காட்டுவதால், பெற வேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை, நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அறிவுறுத்தல்களின்படி, அப்பணத்தை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சரியாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் வருடம் முதல் காணப்படுகின்ற அதிகமாகப் பெறப்பட்ட காப்புறுதி தவணைப் பணக் கணக்கில் மற்றும் பொது வைப்பு கணக்கில் காணப்படுகின்ற முறையே ரூபா 968,265 மற்றும் ரூபா 38,050 ஆன கடன் நிலுவைகளை அடையாளம் காண்பதற்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில், அதிகமாகப் பெறப்பட்ட காப்புறதி தவணைப் பணமும், பொது வைப்புக் கணக்கின் மீதியும் திரட்டப்பட்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைகளை அடையாளம் கண்டு தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மொத்தம் ரூபா 11,045,973 ஆன 03 கணக்கு விடயங்கள் தொடர்பான துணை ஆவணங்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில், திரட்டப்பட்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய துணை ஆவணங்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 2016/05 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சொத்துக்களின் சரியான தன்மையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் | சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தின் பொருட் கணிப்பீட்டு பணிகள் தற்போது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் இடம்பெற்று வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 371(2) ஆ | வேலை முடிந்தவுடன் உடனடியாக செயல் நிமித்த இடைக்கால கட்டுநிதி செலுத்தப்பட வேண்டிய போதிலும், புதிய மானிய உரிமைகளை வழங்குவதற்கான தயாரிப்பு செலவினங்களுக்காக 06 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 600,000 ஆன முற்பணங்கள் உரிய வேலை முடிவடைந்து 195 நாட்கள் தாமதத்துடன் தீர்க்கப்பட்டன. | 2019 ஆம் ஆண்டில் புதிய மானிய உரிமைகளை வழங்குவதில், நிகழ்வு செலவுகளுக்காக வழங்கப்பட்ட முன்கூட்டிய கட்டண வவுச்சர்கள் குறிப்பிட்ட காலக்கட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்டும் வவுச்சர்களுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக, அவை பூர்த்தி செய்யப்பட்டு 2019 திசெம்பர் மாதத்தில் கணக்கிடப்பட்டன. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,450,588,357 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,150,393,688 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 300,194,669 ஆன முன்னேற்றமொன்று காட்டப்பட்டிருந்தது. பங்களிப்புப் பணம் ரூபா 205,928,000 ஆல் மற்றும் வட்டி வருமானம் ரூபா 157,915,338 ஆல் உயர்வடைந்தமையே இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நோய்வாய்ப்பட்ட ஓய்வுபெற்ற அரசாங்க வங்கி அதிகாரி ஒருவர் குறைந்த வருமானம் ஈட்டுபவர் என அறிவிக்கப்பட்டு, அரசு பெறுகை வழிகாட்டுதல்களின் விதிகளுக்கு | முன்னாள் விடயப்பரப்பு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, சமூக பாதுகாப்பு நம்பிக்கைச் சபையின் ஆலோசனை மற்றும் அங்கீகாரத்தின் | உரிய நிபந்தனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முரணாக ரூபா 480,000 செலவில் நோயாளிக்கு வெண்டிலேட்டர் இயந்திரமொன்று வழங்கப்பட்டது. உரிய தேவையை பூர்த்தி செய்த பிறகு, இயந்திரத்தை அரசு மருத்துவமனையில் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனை எட்டப்பட்டதுடன், ஆனால் 2019 ஆகஸ்ட் 5 அன்று நோயாளி இறந்த பிறகு, நிபந்தனையை பூர்த்தி செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | பேரில், நோய்வாய்ப்பட்ட பெண்ணுக்கு வெண்டிலேட்டர் இயந்திரமொன்று வழங்கப்பட்டது. மேலும் அந்த இயந்திரத்தைப் பயன்படுத்திய பின்னர் மீண்டும் அவ்வாறான நோயாளிகளுக்குப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்ட போதிலும், இயந்திரத்தைப் பெற்றவர்கள் தற்போது அந்த முகவரியில் இல்லாததால், அவர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி செயற்பட முடியவில்லை என்பதுடன் , அந்த இயந்திரத்தை திரும்பப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (ஆ) | மகளிர் தினத்தன்று காலி பத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் குறைந்த வருமானம் பெறும் இல்லத்தரசிகளின் வலுவூட்டல் வேலைத்திட்டம் தொடர்பில் 250 பெண்களுக்கு ரூபா 625,000 வழங்கப்பட்ட போதிலும் அவர்கள் குறைந்த வருமானம் பெறுபவர்களா அல்லது சமுர்த்தியாளர்களா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. | சமுர்த்தி சமூக பாதுகாப்பு நம்பிக்கைச் சபை பத்திர இலக்கம் 2019/SSSF/02/03 இன் படி இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், காலி மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்ட 250 பெண் தொழில் முயற்சியாளர்களின் பட்டியலுக்கு ரூபா 625,000 ஆன பயன்கள் வழங்கப்பட்டன. | குறைந்த வருமானம் பெறுபவர்களா அல்லது சமுர்த்தியாளர்களா என்பது உறுதிப்படுத்தப்பட்டு பயன்கள் வழங்கப்பட வேண்டும். |
| (இ) | புதிய சமுர்த்தி மானிய உரிமை விநியோக நிகழ்வுகளுக்காக 25 மாவட்ட பணிப்பாளர் அலுவலகங்களுக்கு ரூபா 69,000,000 முற்பணங்கள் வழங்கப்பட்ட போதிலும் , அந்நிகழ்வு 2019 யூன் 15 அன்று முடிவடைந்திருந்தும் , 2019 திசெம்பர் 31 வரை தீர்க்கப்படாத முற்பணத் தொகை ரூபா 39,255,315 ஆக இருந்தது. | புதிய சமுர்த்தி மானிய உரிமை வழங்கும் விழாவிற்கு 25 மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணத்தில், இதுவரை தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 8,764,103.42 ஆகும். | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிதியத்தின் நோக்கங்களுடன் தொடர்பில்லாத பணிகளான புதிய சமுர்த்தியாளர்களுக்கான உரிமைப்பத்திலம் அச்சிடல், விநியோகித்தல் மற்றும் விழாச் செலவுகளுக்காக 10 சந்தர்ப்பங்களில் ரூபா 116,485,853 செலவிடப்பட்டதுடன், வங்கிச் சங்கங்களிலிருந்து அச் செசலவுகளில் ரூபா 3,410,992 மட்டுமே திருப்பிச் செலுத்தப்பட்டது. | 2019 ஆம் ஆண்டில், சமூக நிதிய வங்கிகளின் மூலம் மீளளிப்பு அடிப்படையில் இந்தத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளதுடன், சமுர்த்தி சமூகப் பாதுகாப்பு நம்பிக்கைச் சபையின் அறிவுறுத்தல்களின்படி, வங்கிகளில் இருந்து நிலுவைத் தொகையைப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(இ) பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் பொதுத் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் , 02 வருட கால தாமதத்தின் பின்னர் 2022 நவம்பர் 10 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2018,2019 மற்றும் 2020 ஆம் வருடங்களுக்கான இறுதிக் கணக்குகள் 2022 மார்ச் 09 ஆம் திகதியும் 2021 ஆம் வருடத்திற்கான இறுதிக் கணக்குகள் 2022 மார்ச் 28 ஆம் திகதியும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் உரிய காலத்தில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.. |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) பிரகாரம் நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பாதீடொன்று தயாரிக்கப்படவில்லை. | சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் பாதீடு தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.. |